DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 63/2020 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | வீரப்பன் |
| Father's Name | : | காளியப்பன் |
| Village | : | வண்ணாவயல் |
| Taluk | : | தேவகோட்டை |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.02.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**குறுக்கு விசாரணை:**

1. விபத்தில் இறந்து போனவர் பெயர் என்ன என்றால் பழனிச்சாமி ஆவார். அவர் எனக்கு நன்கு பழக்கமானவர் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் இருட்டு நேரம் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்றால் இரவு 7 முதல் 8 மணி இருக்கும். விபத்து நடந்த ரோடு பெரிய ரோடு என்றால் பெரிய அகலமான ரோடு ஆகும். விபத்து சம்பந்தமாக என்னை போலீஸார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நானாக சென்று போலீஸில் எந்த தகவலும் சொன்னேனா என்றால்

சொல்லவில்லை. மனுதாரர் தாக்கல் செய்த ம.சா.ஆ.5 ஆவணத்தில் நான் அரசு தரப்பு சாட்சியாகவும் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்து நடந்தவுடன் அவர் விழுந்து கிடந்ததை ஓடிச்சென்று பார்த்தேன் என்றால் சரிதான். நான் சொன்ன லாரிக்கு பின்புரத்தில் மோதி அவர் கீழே விழுந்து கிடந்தார் என்றால் சரிதான். நான் சென்று பார்த்த போது லாரி சற்று தூரத்தில்நின்றது அவர் கீழே விழுந்து கிடந்தார் என்றால் சரிதான். நான் சென்று பார்க்கும் போது அவர் இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். நான் அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

2. இறந்து போன நபர் அவராக சென்று விபத்தை ஏற்பத்திக்கொண்டார் என்றும் எனக்கு வேண்டியவர் என்பதால் லாரி ஓட்டுநர் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் நேரத்தில் அங்கு மழை பெய்து கொண்டிருந்தது என்றால் சரிதான். மழை கனமாக பெய்து கொண்டு இருந்தது என்றால் சரிதான். இறந்துவிட்டவரின் கவனக்குறைவால் விபத்து நடந்தது என்றும் அவரது குடும்பத்திற்கு அதிக இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் தவறான தகவல்களை கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.